

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.3.2025) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு சந்தித்து, 2023–24ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தமிழ்நாடு அரசின் பங்காதாயத் தொகையான 1 கோடியே 21 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) தி.ந. வெங்கடேஷ், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் ஆர். செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.3.2025) தலைமைச் செயலகத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் சந்தித்து, மதுரையில் 2.4.2025 முதல் 6.4.2025 வரை நடைபெறவுள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது அகில இந்திய மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.3.2025) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் நகராட்சி மன்றத் தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் சந்தித்து, இராமநாதபுரம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.3.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்தினருடன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### இலங்கை கடற்படையினர் தமிழ்நாடு மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்!

# முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்திடுக!

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, மார்ச் 28–

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் அதிகளவில் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்பு பேச்சைவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும், இலங்கைச் சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட அனைத்து தூதரக மற்றும் சட்ட உதவிகளை வழங்கிடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 11 மீனவர்களை 27.3.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் அதிகளவில் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்புப் பேச்சைவார்த்தை நடத்திட ஏற்பாடு செய்யவும், இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய தூதரக மற்றும் சட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென்று வலியுறுத்தி, முதலமைச்சர்.மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று (27.3.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் 27.3.2025 அன்று, இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 11 மீனவர்களும், அவர்களது மீன்பிடிப் படகும் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினர் கடந்த 3 மாதங்களில், 11 வெவ்வேறு சம்பவங்களில் 147 மீனவர்கள் மற்றும் 19 படகுகளை சிறை பிடித்துள்ளதை தனது கடிதத்தில் வருத்தத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில், 2024 டிசம்பர் மாதம் இலங்கை அதிபர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது, நமது மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படும் பிரச்சனையை இலங்கை அதிபரிடம் தனிப்பட்ட முறையில் எழுப்பியதாகவும், இந்திய மீனவர்களின் நலனை உறுதியாகக் காப்பதில் ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்று ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் தனது 09.02.2025 நாளிட்ட கடிதத்தில் உறுதியளித்திருந்தபோதிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடந்த சில மாதங்களில் அதிகரித்துள்ளதை தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் கவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, நமது மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், முத்தரப்புப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவும், தூதரக முயற்சிகளைத் தீவிரப்படுத்துமாறு விடுத்த தனது முந்தைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை சிறையில் வாடும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க தேவையான அனைத்து தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சட்ட உதவிகளை வழங்குமாறும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளையொட்டி மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வ.வெங்கட்ராமன் ஏற்பாட்டில் நலத்திட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் ஆடுதுறை உத்திராபதி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் சு.வெங்கடேசன் மற்றும் பகுதி செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# இந்தியா - ரஷ்யா கடற்படைகளின் கூட்டுப் பயிற்சி!

## போர்க் கப்பல்கள் சென்னை வருகை!

சென்னை, மார்ச் 28 –

இந்தியா – ரஷ்யா கடற்படை களின் கூட்டுப் பயிற்சிக்காக போர்க்கப்பல்கள் சென்னைக்கு வருகை தந்துள்ளன. ரஷ்ய நாட்டில் 3 போர் கப்பல்கள் தற்போது தமிழ்நாட்டின் கடலோர பகுதியான சென்னை துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளன.

ரஷ்யாவின் 3 போர் கப்பல்கள் மற்றும் இந்திய கடற்படையின் கப்பல்கள் என இரு நாட்டு தரப்பினரும் ஒருவரோடு ஒருவர் இணைந்து கடற்படைக்கான கூட்டுப்பயிற்சி மேற்கொள்வதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியா – ரஷ்யாவின் கடற்பயிற்சியால் பசுபிக் பெருங்கடல் சென்றுள்ள அநேக கப்பல்கள் சென்னை திரும்புகின்றன.

ரஷ்யாவின் பசுபிக் பெருங்கடல் போர் கப்பல்கள் தான் இந்த கூட்டு பயிற்சிக்காக சென்னை துறைமுகத்திற்கு வந்துள்ளன. கடலோர பாதுகாப்பு தொடர்பாக இரு நாடுகளும் கூட்டு பயிற்சியில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

